உ

சிவமயம்

செம்பனூர்

ஸ்ரீ தீப்பாய்ந்தம்மன்

திருவருட்பதிகம்

வக்கீல்
செம்பனூர்
630 313.

1998—ம் ஆண்டு பிப்ரவரித்

திங்களில் நடைபெற்ற

ஸ்ரீ தீப்பாய்ந்தம்மன்

பொதுப் படைப்பின் போது

வெளியிடப் பெற்றது.

புதுவருட நல்வாழ்த்துக்கள்

வக்கீல்

செம்பனூரர்

உ
சிவமயம்

செம்பனூர்

ஸ்ரீ தீப்பாய்ந்தம்மன் திருவருட்பதிகம்



வக்கீல்
செம்பனூர்
630 313.

உ

ஓம்

வரலாறு

செம்பனூரில் பிரபல வணிகர்குல மணியாய் திரு காளையப்ப செட்டியார் வாழ்ந்து வந்தார்கள். அவர் தம் வாழ்க்கை துணைவியார் அழகம்மை ஆச்சி, பாகனேரியில் பிறந்தவர்கள். அவர்களே பின்னர் தீப்பாய்ந்தம்மாள் என்னும் சிறப்புப் பெயரும் பெற்றார்கள். அழகம்மை ஆச்சி தம் கணவருடன் கோபமாய்த் தாம் பிறந்த ஊர் பாகனேரிக்குப் புறப்பட்டுப் போனார்கள். உடன் வடுக நாயக்கர் பெண்ணாகிய தம் சிநேகிதை ஒருத்தியையும் கூட்டிச் சென்றார்கள். அன்று பாரி வேட்டையாடும் நன்னாள். வேட்டையாட வந்த சிவகங்கை மன்னன் இடைவழியில் சேனைகளுடன் தென்பட்டான். மன்னன் வரும் திசையிலிருந்து மனதைவருத்தத் தக்க தொடர் மொழி யொன்று வந்தது அஃதாவது, தனவணிகர் பெண்மணியாகவுள்ள நீங்கள் இந்த நாளில் இப்படியும் வரலாமா என்பதாகும்.

கணவருடன் ஏற்பட்ட மனவருத்தம் ஒரு பக்கம் வந்த வழியில் மன்னன் மொழி ஒரு பக்கம் " இருதலைக் கொள்ளியின் உள்ளெரும்பாகத் தவித்தார்கள்" உடனே அவ்வுத்தமித் தாய் கணவனார் கட்டளையை உயிர்விட்டாயினும் காக்க உறுதியுளங் கொண்டார்கள் [illegible]லும், அருகிலிருக்கும் பாலாவயலூர் சென்று நெருப்பு வாங்கி வந்து தீ வளர்த்து தாமும் வடுக நாயக்கர் பெண்ணுமாக அத் தீயில் குளித்துத் தெய்வீகமானார்கள். தீப்பாய்ந்த அம்மாளின் திருவருள் மகிமையை உண்மையாய் உணர்ந்து செம்பனூர் தனவைசிய ஆறுகரை பேர்களும் தினமும் கொண்டாடிப் போற்றித் துதித்து வருகின்றனர்.

வேணும்,

ஸ்ரீ சேவுகராயர் தீப்பாய்ந்தம்மன் துணே

3-4

உ

சிவமயம்

ஸ்ரீ சேவுகராயர் தீப்பாய்ந்தம்மன் துணை

செம்பனூர்

ஸ்ரீ தீப்பாய்ந்தம்மன்

திருவருட் பதிகம்

கணபதி துதி.

வெண்பா:

சிறப்பமைந்த செம்பனூர் சேர்ந்த நடுக்காட்டில்
அறச்செல்வியாள் அழகு அம்மை – திறத்துடனே

தீப்பாய்ந்து தெய்வநிலை சேர்ந்தாள் மேற் பாடுதற்கு
வாய்ப்பளிப்பாய் யானை முகவா.

நூல்

தென்னகந்தன்னிலே செம்பனூர் காட்டிலே
திருக்கோவில் கொண்ட நீ வா

திவ்ய பரிமள சுகமாலையணி கோமளச்
செல்வியே யிங்கு வா வா

மன்னு புகழ்தன வைசிய குல மகளே
யெம்மையே வாழ்விக்கும் தேவியே வா

வஞ்சனை யிலாதவர் நெஞ்சிலே குடி கொளும்
மாதரசி ஓடி வா வா

அன்பு நடமாடியே யிங்குனது சேவையே
அனைவர்க்கும் நல்க வா வா

அந்தரி நிரந்தரி சுதந்தரியுடன் கலந்து
அம்புவி யிலங்கும் மாதா

சின்மய சிரோன்மணி பொன்மய மனோன்மணி
தேமதுர வசனி வா வா

சிங்காரி தாயில்லம் செல்கின்ற காட்டிடைத்
தீப்பாய்ந்த எமதம்மையே.

வான் மழை பொய்ப்பினும் மதியிரவி தப்பினும்
வாரி நீர் வற்றி விடினும்

வாய்மொழி குன்றாது பொய்க்காது மாறாத
வைசியர் ஆறு கரையோர்

தான்தினம் உன்னையே தாயென்று நம்பியே
தவறாது மிகவேண்டினோம்

சகலகலை அறிவுடன் குறையாத செல்வமும்
தனிப்புகழ்ச் சேர்க்கை தருவாய்

மான் கயல் விழி பெறுபான் மொழி யுவதியே
வளர் கற்பு மலைத் தீபமே

மங்கல விலாசனி மந்திர உச்சாடனி வாழ்விக்கும்
குல தெய்வமே

தேன் சுவைச் செந்தமிழ் சீர் பொங்கு தொழில்
வளம் செழித்தோங்க வேண்டுமம்மா

தேசுற்ற நகரத்தார் சேவித்தோம் நலனருள்
தீப்பாய்ந்த எமதம்மையே.

கல்வியில் உயர் பாக நேரியிற் தோற்றமாய்
கருணையின் வடிவுதாங்கி

கமழ்கின்ற சோலைசூழ் செம்பனூர் புக்கியே
கனிவுடன் வாழ்கின்ற நாள்

நல்லறநாயகி தாய்மனை செலுதற்கு
நாயகர் தடை கூறிட

நம்பிக்கை யுற்றதோர் வனிதையின் துணையுடன்
நடந்து நீ செல்லும் மார்க்கம்

பல்படை வேந்தனும் கும்பமாம் திங்களிற்
பாரி வேட்டைக்கு வந்தோன்

பாட்டையிற் கண்டுமே தடுத்துமே உபதேசம்
பகர்ந்திடச் செவியிலேற்று

செல்வியாம் தோழியை அனல் கொண்டு
வாவெனச் செப்ப அவள் தான் கொணர்ந்த

சிறு நெறுப்பினைச் சுள்ளி விறகிட்டு வளர்த்தந்த
தீப்பாய்ந்த எமதம்மையே

அம்மையே யாம் செய்யும் பணியெலாம்
உன் திரு வருளன்றி செய்வதில்லை

அனுதினம் மனதினில் நினையா திருக்கிலோம்
அறிகுவாய் பொய்ம்மையில்லை

செம்மை யாய் மங்கள வாரத்தின் நோன்பினைச்
சிறுவரும் மறப்பதில்லை

தேவியுன் திருவிழா நான்காண்டுக்கு ஓர் முறை
செய்யா திருப்பதில்லை

வெம்மைப் பிணிக்குலம் மக்களிடம் மேவாது
விலுக்குவாய் இன்னலில்லை

விளைநிலன் சென்னெல்கள் பல நவதானியம்
விருத்தியாம் பஞ்சமில்லை

திம்மையாம் கனவிலும் நினைக்கிலோம்
செய்கிலோம் செல்வியே குலதேவதா

திக்கெல்லாம் புகழ்பெறும் அற்புத
உருவுடன் தீப்பாய்ந்த எமதம்மையே.

தாலத்த போதனர் சீலக்குணதரர் தனவைசிய
குல மாமணி

தாய்மைக் குணங்கொள்ளும் தூய்மை
செந்தாமரை தன்னைநிகர் சுகிர்தவதனி

காலைக் கதிரவன் போலெழுந்து எங்களின்
கவலை இருள் களையும் ரமணி

கண்கண்ட தெய்வமே கற்பெனுங் குன்றமே
கதிநீயே சேமதருணி

ஆலைக் கரும்பென நையாது வாழ்வின்
நல்லாக்கம் உண்டாக்கும் வகைநீ

அம்மம்மா செய்குவாய் நின் தண்டைக் காலினை
அயர்க்கிலோம் குணபூஷணி

சேலைப் பழித்திட்ட செவ்வரிக் கண்கொண்டு
தினமெம்மை நோக்குவாயே

செய்யவள் உறைகின்ற செம்பனூர்த் தலைவியே
தீப்பாய்ந்த எமதம்மையே

முத்து மூக்குத்தி வொளிர் நத்து வயிரத்தோடு
மோகனக் கொப்பு முருகு

முகப்புள்ள தாவடம் சங்கிலிக் கோர்வைகள்
முன்கர வளைகள் வங்கி

மெத்த நவரத்தின மிழைத்த யிடை யாபரணம்
மின்ன மேகலை பூஷணம்

மேன்மை விரலாழி நுதல் சூடுநகை யிருபிறை
விளங்கு சடை நாகருடனே

கத்து கடலத்தனையும் வியப்புற்றயரக்
காலணி சிலம் பொலிக்க

கரையிலா ஆனந்தக் கூத்தாடி யெங்கள்
முன் காட்சி தரவேண்டுமம்மா

சித்தர் புகழ் செம்பனூர் ஆறுகரை நகரத்தார்
சிரந்தாழ்ந்து போற்றுகின்றோம்

செல்வியே வுன்தோழி பாலவயல் சென்று
கொணர் தீப்பாய்ந்த எமதம்மையே.

அண்ட பகிரண்ட நவகண்டபுகழ் கொண்டுவளர்
ஆதியணையாத ஜோதி

அற்புத விசித்திர சமத்துவ மகத்துவ
மிகுந்த வானந்த வாரி

குண்டல மிரண்டொளிர் சுமங்கலி பெருங்கருணை
கோமள விலாசி மாரி

குற்றமது வற்ற திருவித்தகர் கரத்தில் நிறை
கோலேந்து மரபின் மணியே

வண்டு விழி முண்டக முக்ங் கடலை யுண்டபுயல்
வாகு குழல் கோலமயிலே

மக்களின மிக்க நலமுற்றிட வருட்கனி வழங்க
வரு ஞான வுருவே

பண்டுவினைத் தொந்தமற யெங்கள் கலியுந்தவிர
பண்புடன் ஆடி வருவாய்

பச்சைப் பசுங்கிளி அச்சமில்லாது
தீப்பாய்ந்த எமதம்மையே

கற்பனைக் கெட்டாத வொப்பனைக்காரியே
கன்னித் தமிழ்ச் செல்வியே

கனவிலும் நினைவிலும் வூனே மனத் துதியுடன்
கரங்கூப்பிப் போற்றுகின்றோம்

விற்பன விவேகியே களரியில் எங்கள் முன்
விளையாட ஓடி வா வா

வேத விஸ்தாரியே படையலிள நீர்
தூப விமரிசை காண வா வா

தற்பரை சாம்பவி சத்தி யுமையாளுடன்
சார்ந்த சௌபாக்கிய வதியே

தந்தனத் தந்தவென சந்தவரிசைத் தாள
தண்டைச் சிலம்போடு வா

சிற்பரர் சேவுகராயர்.. உடையம்மையுடன்
சேர்ந்து நீ யாதரிப்பாய்

தெய்வீக ராணியே செம்பனூர் காட்டிடைத்
தீப்பாய்ந்த எமதம்மையே.

தேவி யபிராமி கலைவாணி தனயோக
சுகசீதள தயாரஞ்சனி

க்ஷேம வனுகூல நலஞான குணசாலி
அருள் சேகர சிவானந்தனி

சேவை தருவாயே திருவே கருணே வாரிதியே
தேடிவரு மாசெல்வமே

தேனை நிகரான தமிழ் நாடதனில் கோவில்
கொளும் சீரணி தபோ சுந்தரி

மேவி வரு தீயவினை யாவு மணுகாது
தவிர் வேத சுபோதவல்லி

வேறு புகலாரு மிலை நீகெதி மனோகர
விலாசனி தபோ சுந்தரி

தேவை யெதுவோ யதுவெலாந் தருகுவாயழகு
செம்பனூர் வாழுமரசி

சீவனிலையான வுடல் பாரமெனவே கருதி
தீப்பாய்ந்த எமதம்மையே.

மங்கையர்க் கரசியே வுனைத் துதிசெய்கின்ற
மக்களினம் வாழவேண்டும்

மாத மும்மாரியே பெய்து விளை தானிய
மணிகள் மலிவாக வேண்டும்

அங்கயற் கண்ணியே நீதி நிலை குன்றாது
அரசு கோலாச்ச வேண்டும்

அம்மையே தருமத்தின் பேராலே நம்நாடு
அதிகம் செழிக்க வேண்டும்

பங்கயச் செல்வியே செய்தொழில் அனைத்துமே
பாரில் மேலோங்க வேண்டும்

பக்தி நிலை யுச்ச மாவித்துவ விவேகிகள்
பல்லாண்டிருக்க வேண்டும்

சிங்காதனத்தியே வெம்பிணிப் பாவ வினை
சேரா தகற்ற வேண்டும்

செம்பனூர் ஆறுகரைச் செல்வர் குல தேவதா
தீப்பாய்ந்த எமதம்மையே

ஆக்கியோன்:– திரு இசக்கிமுத்து வாத்தியார்,மதுரை

வேறு

ஆதிகௌமாரி திரிசூலி அபிராமி கோதண்டவல்லி

அண்ட பகிரண்ட புவனங்கள் ஏழும் அழகொடு பயின்றரூபீ

நீதியொடு பாகவளர் சிவ சிதம்ப ரேஸ்வரி நிஷ்களானந்தரூபி

நீரணி கடாட்சரி செம்பனூர் காடுதனில் நிலையாக நின்ற ரூபி

நித்தமும் நீவந்து விளையாடிக் குடிகொண்டு நாங்கள் நினைத்த வரம் தந்தருள்வாய்

மாது வளர் நாச்சியார் சேவுகராயருடன் வரம்தரும் உடையமைத்தாய்

வந்து வளர் செம்பனூர் மழையது பொழியவே வரம் தரவேணுமம்மா

சீர் மேவும் பொற்கமலம் செம்பனல்லுர் மேவும் சேவுகராயர் பாதம் அடிபணிந்தோம்

கார்மேகவண்ணன் எங்களுக்கு உதவி செய்யும் பெரிய கருப்பண்ண சுவாமி உடையமைத்தாய்

நீர் சூழ் புவிமீது உன்னை நம்பின பேருக்கெல்லாம் நிரந்தர வஸ்துவாய் நின்ற மூர்த்தி

பார் மீதில் எங்களுக்கு உதவியாக வந்து
பாலவனம் இருக்கின்ற தாயே.

அன்ன பரிபூரணி அழகம்மை கருப்பாயி லெட்சுமி

எங்கள் ஆறுகரை பேருக்கும் உதவிசெய்ய
வேணுமம்மா

உனது அடிமையாக வந்த மானிட பேருக்கெல்லாம்

நீ சொன்ன உறுதியைக் கொடுக்க வேணும் அம்மா

சின்ன வயதில் தீக்குளித்த சவுந்தரி மகமாயி

உன் சந்தோஷ வேளையெல்லாம் நீ வந்து விளையாடி.
எங்கள் சலிப்பெல்லாம் தீர்க்க வேணுமம்மா.

பாச்சல் குதிரை பதினாயிரம் பந்தி பார்க்கும்
கண்ணால்

ராச்சியம் தன்னில் மெய்ஞ்ஞான சேவுகராயர்பதி

பாய்ச்சல் உடையமைத்தாய் என்றைக்கும்
வளர் குழந்தையென்

காச்சலைத் தீர்த்தருள்செய்வாய்
பெரியகருப்பண சுவாமி.

சுபம்

ராஸ் பிரிண்டர்ஸ்

ராஸ் டெலி கம்யுனிகேஷன் சர்வீசஸ்

49, டி.டி.கே.சாலை,

ஆழ்வார்ப்பேட்டை,

சென்னை – 600 018.

போன் : 4990222